# வள்ளலார் பார்வையில் பிரபஞ்சத் தோற்றம்

***திருமதி அ. ரூபாதேவி***
உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை
ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி
https://doi.org/10.5281/zenodo.15526572

*விஞ்ஞானமும் மெய்ஞானமும் இரண்டறக் கலந்து ஆன்மிக உலகிற்கு அணி சேர்ப்பது மட்டுமின்றி இவ்வுலகையும் இயக்கிக் கொண்டிருக்கின்றன. பிரபஞ்ச தோற்றங்கள் பற்றி அறியும் பொருட்டே, மனிதனிடம் ஆறாவது அறிவான பகுத்தறியும் சிந்தனையாற்றல் அமைந்திருக்கின்றது. மெய், வாய், கண், மூக்கு, காது என்னும் ஐம்பொறிகள் மூலம் தோற்றப் பொருட்களை உணர்த்துவது ஐந்தறிவு. புலன்கள் மூலம் உணரப் பெறும் பொருட்களுக்கு மூலமான மனம், காந்தம், விண், மெய்ப்பொருள் இவற்றை அறியக் கூடிய அறிவுதான் ஆறாவது அறிவாகும். இவ்வறிவைக் கொண்டு கண்டறியப்பட்ட பிரபஞ்ச தோற்றம் பற்றிய வள்ளலாரின் கருத்துக்களை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.*

## அணு பற்றிய சிந்தனை

*பூமியைத் தவிர மற்ற அண்டங்களில் உயிர்கள் வாழ்கின்றனவா? என்பதை அறிவியல் அறிஞர்கள் பல்லாண்டுகளாக ஆராய்ச்சி செய்து, சில அடிப்படை நிலைகள் இருந்தால் இந்தக் கோடிக்கணக்கான அண்டங்கள் பலவற்றில் உயிர்கள் வாழ்வது உறுதி என்பதை கண்டறிந்துள்ளனர். ஆனால் வள்ளலார் பல்லாண்டுகளுக்கு முன்னரே,*

***"அண்டவகை எவ்வளவோ அவ்வளவும்***
***அவற்றில் அமைந்தவுயிர் எவ்வளவோ அவ்வளவும்"***

*என்று குறிப்பிட்டுள்ளார். இங்கு வள்ளலார் அண்ட வெளிகளில் உயிர்கள் வாழ்வதை விளக்கியுள்ளமை அவரது அறிவியல் நுட்பத்தினை வெளிப்படுத்துவதாக உள்ளது. வள்ளலாரின் இக்கருத்தினை உறுதிப்படுத்தும் வகையில் வேதாத்திரி மகரிசியும்,*

***"ஆதியெனும் பரம்பொருள் மெய்யெழுச்சி பெற்று***
***அணுவென்ற உயிராகி அணுக்கள் கூடி***
***மோதியிணைந்து இயங்குகின்ற நிலைமைக்கேற்ப***
***மூலங்கள் பலவாகி அவையிணைந்து***
***பேதித்த அண்டகோடிகளாய் மற்றும்***
***பிறப்பு இறப்பிடை உணர்தியக்கமாகி"***

*என்று குறிப்பிட்டுள்ளார். இக்கூற்றினால் சுத்தவெளி என்ற பரம்பொருள் எழுச்சி அடைவதால் அணுக்கள் தோன்றுகின்றன என்பதையும் இந்த அணுக்களே பிரபஞ்ச பரிணாம வளர்ச்சியின் மூலமாகவும், பரிணாம உயிர்குளின் வளர்ச்சிக்கு ஊக்கியாகவும் செயல்படுகின்றது என்பது தெளிவுபடுத்தப்படுகின்றது.*

*வள்ளலார் தான் கண்டறிந்து கடைப்பிடித்த அருள்நெறி மீது அளவற்ற பற்று கொண்டவர். இந்த அருள்நெறியே இவ்வுலகினை இயக்குகின்றது என்பதை,*

***"அருளிலாது அணுவும் அசைந்திடாது***
***அருள் நலம் பரவுகென்று அறைந்த மெய்ச்சிவமே"***

*என்றும்,*

***"அடுக்கியபேர் அண்டம் எலாம் அணுக்கள் என விரிந்த***
***அம்மே என் அப்பாஎன் ஐயா என் ஆசே"***

*என்றும் குறிப்பிடுகிறார். இக்கூற்றினையே திருவிளையாடற் புராணத்தில் பரஞ்சோதியார் குறிப்பிடுகையில்*

***"அண்டங்கள் எல்லாம் அணுவகை***
***அணுக்கள் எல்லாம்***
***அண்டங்களாகப் பெரிதாய்ச்***
***சிறிதாயினானும்"***

*என்கிறார். எனவே இவ்வுலகில் அணுவை விடப் பெரியதும், சிறியதும் வேறெதுவும்*

இல்லை என்பதை நாம் உணரலாம். இந்த சிறிய அணுதான் அகிலத் தோற்றங்களுக்கும் அடிப்படை ஆகும். அணுவைக் கடந்து நாம் வேறெதும் இவ்வுலகத் தோற்றங்களுக்கான காரணங்களை ஆராய இயலாது என்பது திண்ணம்.

வள்ளலாரின் அணுக்கள் பற்றிய அறிவாற்றல் ஜான் டால்டன் என்ற அறிஞரின் கருத்துடன் ஒப்பு நோக்குதற்குரியது. இதனை,

**"பொருள் சிதைந்து உருவாகும் மிகச்சிறிய துகள்களே அணுக்கள். அவற்றை மேலும் சிதைக்க முடியாது"**

என்றும்,

**"ஒரு குறிப்பிட்ட மூலத்தின் அணு சிறியதாக இருப்பினும் அம்மூலகத்தின் எல்லாத் தன்மைகளையும் அது பெற்றுள்ளது."**

என்றும் குறிப்பிடுகிறார். இங்கு, மிக நுண்ணிய அணுவே பிரபஞ்சம் முழுமைக்குமான மூலகாரணி என்பதை அறிவியல் அறிஞர்களும் ஏற்றுக் கொண்டதை இக்கூற்று தெளிவாக்குகின்றது. வள்ளலார் அணு என்பதை "விண்" என்றே பல இடங்களில் குறிப்பிடுவதைக் காண முடிகின்றது. சூரிய, சந்திர மண்டலங்கள், நட்சத்திரங்கள் போன்றவை அனைத்தும் விண்ணின் தொகுப்பு என்றும், இவை அண்ட வெளிக்குள் அடங்குவது என்றும் குறிப்பிடுவதை,

**"விண்ணெலாம் கலந்த வெளியில் ஆனந்தம்"**

என்னும் அருட்பா உணர்த்துகிறது.

## ஐம்புதங்களின் தோற்றம்

இந்த உலகமானது நிலம், நீர், தீ, வளி, வெளி என்னும் ஐம்பூதங்களின் தொகுப்பினால் தோன்றியவை என்றும், விண்ணும் சுத்த வெளியும் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் சேர்ந்து ஐம்புதங்கள் உண்டாகிறது என்பதை வள்ளலார் குறிப்பிடுகையில்,

**"மண்ணில் ஐந்தியல் வகுத்ததில் பல்பயன்<br>
அண்உற வகுத்த அருட் பெருஞ்ஜோதி<br>
நீரிடை நான்கியல் நிலவுவித்து அதில் பல<br>
ஆர்தர வகுத்த அருட் பெருஞ்சோதி<br>
தீயிடை மூவியல் செறிவித்து அதிற்பல<br>
ஆய்வகை அமைத்த அருட் பெருஞ்ஜோதி<br>
காற்றிடை ஈரியல் காட்டி அதிற்பல<br>
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி<br>
வெளியிடை ஒன்றே விரித்து அதிற்பல<br>
அளிஉற வகுத்த அருட்பெருஞ்ஜோதி"**

என்று குறிப்பிடுகிறார்.

சுத்த வெளியில் விண் 5.95 விகிதத்தில் சேரும் பொழுது மண்ணும், 4.96 விகிதத்தில் சேரும் பொழுது நீரும், 3.97 விகிதத்தில் சேரும் பொழுது நெருப்பும், 2.98 விகிதத்தில் சேரும் பொழுது காற்றும், 1.99 விகிதத்தில் சேரும் பொழுது வானும் தோன்றுகின்றன. வள்ளலாரின் இக்கூற்றக்கு அரண் சேர்க்கும் வகையில்,

**"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி<br>
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி<br>
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி<br>
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி<br>
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி"**

என்ற மாணிக்க வாசகனின் பாடலும்

**"விண்காற்று வெப்பம் நீர் நிலம் ஐந்தான<br>
வேறுபட்ட அடர்த்திநிலை இயக்கங்கட்குள்<br>
விண்ணேதான் ஐந்துக்கும் உயிர்வித்தாகும்<br>
விரைவுதான் வேறுபடும் ஒன்றுக்கொன்று"**

என்ற வேதாத்திரி மகரிசியின் பாடலும் அமைகின்றது. மேங்கண்ட ஐம்பூதங்களின் தன்மையை, அதன் நுட்பத்தை பழந்தமிழர்களும் அறிந்து வைத்துள்ளமையை,

**"மண் திணிந்த நிலனும்<br>
நிலம் ஏந்திய விசும்பும்<br>
விசும்பு தைவரு வளியும்<br>
வளித் தலைஇய தீயும்<br>
தீமுரணிய நீரும்"**

என்ற புறநானூற்றுப் பாடலால் அறியலாம். அணுக்கள் செறிந்த நிலமும், அந்நிலத்தில் உயர்ந்தோங்கியுள்ள விசும்பும், அந்த விசும்பில் உலவக் கூடிய காற்றும், அக்காற்றால் உண்டாகும் தீயும், அந்தத் தீயுடன் மாறுபட்ட தன்மையுடைய நீரும் என்றெல்லாம் குறிப்பிடுவது நம் முன்னோர்கள் நுண்மான் நுழைபுலன் அறிவு நிரம்பப் பெற்றிருந்ததைப் புலப்படுத்துகின்றது.

தொல்காப்பியரும் ஐம்புதம் பற்றி குறிப்பிடுகையில்,

"**நிலம் தீ நீர் வளி விசும்போ டைந்தும் கலந்த மயக்கம் உலகம்**"

என்று குறிப்பிடுவதைக் காணலாம்.

### விண் தத்துவம்

விண்ணின் தற்சுழற்சியின்றி, பொருள்கள் இயங்காது என உணர்ந்த வள்ளலார், விண்ணின் இயக்கம் குறித்து எடுத்துரைக்கும் விதமாக,

"**விண்ணினுள் விண்ணாய் விண்ணடு விண்ணாய்**
**அண்ணி நிறைந்த அருட்பெருஞ்ஜோதி**
**விண் உறு விண்ணாய் விண்நிலை விண்ணாய்**
**அண்ணி வயங்கும் அருட்பெருஞ்ஜோதி**"

என்கிறார். இப்பாடலின் மூலம் ஓர் அணுவை நாம் ஆராய்ந்து உண்மையை அறியும் பொழுது அவ்வணுவிற்கு அகம், புறம், இடைநிலை ஆகிய மூலக்கூறுகள் உள்ளன என்பது தெரியவருகிறது. "விண்" என்னும் அணுவின் அகமாக, புறமாக, இடைநிலையாக விளங்குவது எது எனில் அருட்பெருஞ்ஜோதி தான் என்பதை வள்ளலார் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. சுத்த வெளி முழுவதும் நீக்கமற நிறைந்து காணப்படும் விண் அணுக்கள் ஒவ்வொன்றிலும் அருட்பெருஞ் ஜோதியின் விளக்கமும் செயலும் ஆதிமுதலே இருந்து வருவது உணரப்படுகின்றது. மேலும் "விண்" தத்துவமானது நமது உடலின் "உயிராக" இயங்குவதையும் அறிய நேரிடுகின்றது.

### காற்றுத் தத்துவம்

காற்றின் சக்தியாயும், அகப் புறமாகிய இடையுறு இயக்கமாகவும் விளங்குவது அருட்பெருஞ்ஜோதி தான் என்பதை வள்ளலார் குறிப்பிடும் பொழுது,

"**காற்றினுட் காற்றாய்க் காற்றிடைக் காற்றாய்**
**ஆற்றலின் ஓங்கும் அருட்பெருஞ்ஜோதி**
**காற்றுறு காற்றாய்க் கானிலைக் காற்றாய்**
**ஆற்ற விளங்கும் அருட்பெருஞ்ஜோதி**"

என்கிறார். விண்ணணுவானது அகத்திற்கும் புறத்திற்கும் இடையில் இயக்க ஆற்றல் களமாயிருந்து சிற்றசைவை தோற்றுவிக்கின்றது. அந்த அசைவின் இயக்கம்தான் காற்றின் விளைவுகளுக்கு காரணியாக அமைகின்றது. அருட்பெருஞ்ஜோதியின் இயக்கத்தால் வெளிப்பட்டு விளங்கும் காற்றானது, வான்வெளி முழுவதும் நிரம்பியுள்ள உண்மையை நாம் அறியலாம். இந்த காற்று தத்துவமானது, மனித உடலில் சுவாசிக்கும் மூச்சுக் காற்றாக இயங்கி மனிதனை உயிர்வாழச் செய்கின்றது.

### நெருப்புத் தத்துவம்

அணுக்களை நாம் பிளந்தும், சிதைத்தும், இணைத்தும் சோதனைக்கு உட்படுத்தும் பொழுது தீயினை உண்டாக்கும் தோற்றுவாயாக இருப்பதுஅருட்பெருஞ்ஜோதிதான். மனிதனின் முதற் கண்டுபிடிக்கு நெருப்பு என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நெருப்புத் தத்துவமானது மனித உடலில் வெப்ப ஓட்டமாக இயங்கி, மனிதனின் உடல் வெப்பநிலையை சீராக்குகின்றது. நெருப்புப் பற்றி வள்ளலார்,

"**அனலினுள் அனலாய் அனல் நடு நனலாய்**
**அனல் உற விளங்கும் அருட்பெருஞ்ஜோதி**
**அனல் உறும் அனலாய் அனல்நிலை அனலாய்**
**அனல் உற வயங்கும் அருட்பெருஞ்ஜோதி**"

என்ற அருட்பெருஞ்சோதி அகவல் வரிகளில் குறிப்பிடுவதைக் காணலாம்.

### நீர்த் தத்துவம்

"**புனலினுள் புனலாய் புனலிடைப் புனலாய்**
**அனை என வயங்கும் அருட்பெருஞ்ஜோதி**
**புனலுறு புனலாய்ப் புனல் நிலைப் புனலாய்**
**அனை எனப் பெருகும் அருட்பெருஞ்ஜோதி**"

என்று வள்ளலார் நிலத்தினில் 71 சதவீதம் அளவு பரந்து விரிந்து காணப்படும் நீர் பற்றிக் குறிப்பிடுகிறார். அனைத்து இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் காற்றில் மிக நுண்ணிய அளவில் நீர் அணுக்கள் உண்டு என்பதும், அந்த நீரணுவின் அகத்தே நுண்ணியதாக திரவ அணுநிலை உண்டு என்பதும் அறியப்படுகின்றது. இவ்வாறான நிலையிலிருந்து வெளிப்படும் நீர்ச் சத்துதான் நீராவியாக விளங்குகின்றது என்பதும் இதுவே

*நீருக்கு "அனையாக" விளங்குகின்றது என்றும் வள்ளலார் குறிப்பிடுவதைக் காணலாம். இந்த நீர்த் தத்துவமானது மனிதருக்குள்ளே இரத்த ஓட்டமாக இயங்குவதுடன், இரத்த ஓட்டத்தை சீரமைக்கவும் செய்கின்றது.*

**நிலத் தத்துவம்**

*உலகில் 29 சதவீதமாக பரந்து விரிந்து இருக்கும் நிலத் தத்துவம் பற்றி வள்ளலார் குறிப்பிடுகையில்,*

***"புவியின் உட்புவியாய்ப் புவிநடுப் புவியாய்***
***அனவதர வயங்கும் அருட்பெருஞ்ஜோதி***
***புவியுறு புவியாய்ப் புவிநிலைப் புவியாய்***
***அவைகொள விரிந்த அருட்பெருஞ்ஜோதி"***

*என்கிறார். புவியின் அனைத்துப் புறங்களிலும் சூழ்ந்துள்ள இந்நிலவுலகை இயக்கிக் கொண்டிருப்பது அருட்பெருஞ்ஜோதிதான். உயிரினம் வாழ்வதற்கான தகவலமைப்பைப் பெற்று, இவ்வுலகை முறையாய் இயக்கிக் கொண்டிருப்பதனாலேயே "புவிநிலை" என்று வள்ளலார் குறிப்பிடுவதைக் காணமுடிகின்றது. இந்த நிலத் தத்துவமானது மக்கள் வடிவில் பரு உடலாக வடிவெடுத்திருக்கின்றது.*

*எனவே, இத்தகு அருட்பெருஞ்ஜோதியைப் போற்றி வாழ்த்தலே மானுட இனத்திற்கு சிறப்பைத் தருவதாகும். ஏனெனில், ஐம்புதங்கள் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்தும், மனித உடலில் இரண்டறக் கலந்தும், நம்மையும் உலக உயிர்களையும் இயக்கிக் கொண்டிருக்கின்றன. அருட்பெருஞ் ஜோதியின் மகிமையை உணர்ந்த வள்ளலார் "ஆண்டவர் ஒருவரே அவரே அருட்பெருஞ்ஜோதி யானவர்சு என்றும்,*

***"அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி***
***தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி"***

*என்றும் போற்றுகிறார்.*

**தொகுப்புரை**

- *பரம்பொருள் எழுச்சி அடைவதால் அணுக்கள் தோன்றுகின்றன. இந்த அணுக்கள் பிரபஞ்ச பரிணாம உயிர்களின் வளர்ச்சிக்கு ஊக்கியாக செயல்படுகின்றன.*
- *உலகமானது ஐம்புதங்களின் தொகுப்பினால் தோன்றியது என்று வள்ளலார் கூறுவது அவரின் தொன்மைக் கால அறிவியல் சிந்தனையை வெளிப்படுத்துகின்றது.*
- *விண் என்னும் அணுவின் அகம், புறம், இடைநிலையாக விளங்குவது அருட்பெருஞ்ஜோதி தான் என்று வள்ளலார் கூறுவது அவரின் அறிவியல் தளத்தில் அமைந்த ஆன்மீகச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றது.*
- *நிலமானது உயிரினங்கள் வாழ்வதற்கான தகவமைப்பைப் பெற்று முறையாய் இயங்குவதனாலேயே இவ்வுலகம் நிலைத்த தன்மையைப் பெற்றுள்ளது.*

**துணைநூற் பட்டியல்**


1. *செந்தமிழ் செல்வர்(உ.ஆ.) - திருவருட்பா, வடஆர்க்காடு மாவட்ட சமர சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், வேலூர்.*
2. *வேதாத்திரியின் இறைநிலை விளக்கம் - வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி வெளியீடு, ஆழியாறு.*
3. *பரஞ்ஜோதி முனிவர் - திருவிளையாடற் புராணம், தீபம் வெளியீடு, சென்னை.*
4. *துரைச்சாமிப்பிள்ளை, சு., (உ.ஆ.) - புறநானூறு, சைவ சித்தாந்த கழகம் வெளியீடு, திருநெல்வேலி.*
5. *இளம்புரணர் (உ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை.*